REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

'நம் நாடு'
ஐந்தாம் ஆண்டு மலர்
சென்ற ஆண்டினும் சிறப்பாக
15-6-57 அன்று வெளிவருகிறது
★
விவரங்கள் அடுத்து

மலர் 4] சென்னை: வைகாசி 23உ புதன் (5—6—57) ★ ★ வெளியூர்: வைகாசி 24உ வியாழன் (6—6—57) [இதழ் 305

'பெரிய துப்பாக்கிகளும் எங்களை நகர்த்தாது'

நாங்கள் இடம் பெயர மாட்டோம்

தெ. ஆ. சர்க்காரின் கொடுங்கோன்மைக்கு பூர்விக மக்கள் காட்டும் எதிர்ப்பு

ஜானன் (டிரான்ஸ்வால்) சூன் 5—

தென்னாப்பிரிக்க சர்க்கார், நாட்டின் பூர்வீகக் குடிகளைப் படுத்திவரும் கொடுமைகள் நாளுக்கு நாள் விரிவாகி வருகின்றன.

மலைப் பகுதியில் வாழும் ஒரு பூர்வீகக் குடிமக்களை, 400 - குடும்பத்தவர்களை, அவர்களது மலைப் பிரதேச வீடுகளிலிருந்து வெளியேறி வேறு இடங்களில் குடிபுகுமாறு தெ. ஆ. சர்க்கார் வற்புறுத்துகிறது. ஆனல் அந்தக் குடிமக்களோ குடி பெயர மறுக்கின்றனர்.

சர்க்கார் அதிகாரிகள் லாரிகளைக் கொண்டுவந்து நிறுத்திக் கொண்டு அவர்களைக் கட்டாயமாகக குடி பெயர்க்க முயற்சித்துத் தோல்வி கண்டிருக்கின்றனர்.

குடும்பத்திற்கு 25 பவுன் வீதம் நஷ்ட ஈடு தருகிறோம் என்ற ஆசை வார்த்தையும் பலன் தரவில்லை.

எனவே, இப்போது இராணுவத்தை அழைத்துவந்து துப்பாக்கி முனையைக் காட்டி பயமுறுத்தி அந்தப் பூர்வீக மக்களைக் குடிபெயர்த்துவிட முயற்சிக்கிறதாம் தெ. ஆ. சர்க்கார்.

அவர்களோவெனில், பெரிய துப்பாக்கிகளால் கூட எங்களை நகர்த்திவிட முடியாது, நாங்கள் இங்கேதான் இருப்போம். வேறெங்கும் குடிசெல்ல மாட்டோம் என்கின்றனராம்.

அல்ஜீரியாவுக்குப் படை அனுப்புக

ஐ. நா. பாதுகாப்புச் சபைக்கு தேசீய இயக்கம் வேண்டுகோள்

படுகொலை புரிந்துவரும் பிரெஞ்சு இராணுவம் உடனடியாக வெளியேறவும் கோரிக்கை

பாரிஸ், ஜூன் 4—

அல்ஜீரியாவில் நூற்றுக்கணக்கான மக்களைக் கொன்றுகுவிக்கும் பிரெஞ்சு ஏகாதிபத்தியக் கொடுங்கோன்மைக்கு முற்றுப்புள்ளி வைக்க, ஐ. நா. படை ஒன்று அனுப்பப்பட வேண்டும் என்று அல்ஜீரியாவின் இரு பிரதான விடுதலை இயக்கங்களில் ஒன்றான அல்ஜீரிய தேசீய இயக்கத்தின் அரசியல் குழு ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் காணப்படுவதாவது:

"அல்ஜீரியாவிலிருந்து பிரெஞ்சு இராணுவம் உடனடியாக வெளியேற வேண்டும். இதற்காக நாங்கள் ஐ. நா. பாதுகாப்புச் சபையிடம முறையிடுகிறோம். பிரெஞ்சு இராணுவத்தின் அடக்குமுறை அளவுமீறிவிட்டது. கடந்த வாரம் மெல்குஜா என்ற இடத்தருகில் 302 அல்ஜீரிய கிராம வாசிகள் அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர்.

"அல்ஜீரிய மக்கள் படும் அவதிகளுக்குள்ள ஒரே பரிகாரம், அவர்களது சுயநிர்ணய உரிமையையும் சுதந்திரத்தையும் பிரெஞ்சு ஏகாதிபத்தியம் அங்கீகரிப்பது தான். இதற்காக ஒரு வட்ட மேஜை மாநாடு கூட்டுவதுடன் பேச்சுவார்த்தைகளை எவருடன் துவங்குவது என்ற பிரச்சினைக்காக ஒரு சர்வதேசக் கமிஷனின் மேற்பார்வையில் தேர்தல் நடத்த வேண்டும்."

காரோட்டும் பெண்ணே!

சுதந்திரவிழாவுக்கு வருக!

கோலாலம்பூர், சூன் 3—

காரோட்டும் ஆங்கிலப் பெண்மணி ஒருவரை, மலாய முதன் மந்திரி துங்கு அப்துல் ரஹ்மான் மலாய நாட்டுச் சுதந்திர விழாவுக்கு வருமாறு அழைத்திருக்கிறாராம்.

"பன்னி" என்று செல்லமாக அழைக்கப்படும் அந்தப் பெண்மணி தான், நான் இலண்டன் சென்றிருந்த இரு தடவைகளும் எனக்கு கார் ஓட்டினர். லண்டன் முழுவதையும் சுற்றிக் காட்டினர். அந்தப் பெண்மணியின் முழுப் பெயரும் எனக்குத் தெரியவில்லை. அவளை நான் ராஜாங்க விருந்தாளியாக சுதந்திர விழாவுக்கு அழைத்தபோது, மிகவும் மகிழ்ந்தாள். எல்லா செலவுகளையும் நாமே ஏற்றுக்கொண்டு அவளை சுதந்திர விழாவிற்கு வர அழைத்திருக்கிறேன். அவள், பிரிட்டிஷ் காலனி இலாகாவில் பணியாற்றுகிறுள்." என்று துங்கு கூறியிருக்கிறார்.

உத்யோக உயர்வுக்கு வரம்பு கூடாது

புதுடில்லி, சூன் 3—

இந்திய இரயில்வேக்களில் உத்தியோக உயர்வுக்கு தக்க பரீட்சைகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும், இந்த பரீட்சைகளில் தேரியவர்களுக்கு பதவி உயர்வுகளுக்கு வரம்பு இருக்ககூடாது என்று இரயில்வே அமைச்சர் ஜகஜீவன்ராம் தெரிவித்துள்ளார்.

மின்சாரயந்திரசாதனங்கள் இறக்குமதி

அவசரமாக அனுமதிக்கக் கோரி டில்லியிடம் முறையீடு

சென்னை, சூன் 4—

மின்சாரத் திட்டங்கள் பலவற்றிற்குத் தேவைப்படும் சாதனங்களை வாங்குவதற்கு சென்னை மாநிலத்திற்கு ரூ. 60 இலட்சம் ரூபாய்வரை அன்னியச் செலாவணி வசதி தேவைப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சர்க்கார் அனுமதிக்காவிட்டால், மாநிலத்தின் மின்சார சப்ளை வெகுவாகப் பாதிக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

கடந்த ஆறு மாத காலத்தில் இந்த மாநில சர்க்காருக்கு 3 - இலட்சம் ரூபாய் பெறுமான அன்னியச் செலாவணியே அனுமதிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

உடனடியாகக் குறைந்த பட்சம் ரூ. 35 இலட்சத்திற்கேனும் அன்னியச் செலாவணி வசதி தேவை என்றும் அப்போது தான் சில முக்கியத் திட்டங்களை உடனடியாக நிறைவேற்ற முடியும் என்றும் கூறப்படுகிறது.

இந்தச் சாதனங்களை இறக்குமதி செய்துகொள்ள டில்லி

அறிவிப்பு

சென்னையில் பரவியுள்ள 'விஷ ஜுரம்' 'நம் நாடு' ஊழியர்களில் பெரும்பாலானவர்களைப் பிடித்துள்ளதால் கடந்த சில நாட்களாக பத்திரிகைகள் உரிய காலத்தில் வெளியூர்களுக்கு அனுப்பப்பட முடியவில்லை. தோழர்கள் பொறுத்தருள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

—(நிர்வாகி)

தி. மு. கழகத் தலைவர்கள் இலங்கை செல்லத் தடை

தமிழர் அறப்போரை ஒடுக்கும் நடவடிக்கையின் பகுதியாம்

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் இலங்கை செல்ல முடியாதவாறு, இலங்கை தடை விதிக்கும் என்று தெரியவருகிறது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் வரும் ஆகஸ்டுத் திங்களில் நடத்தவிருக்கும் சுதந்திரப் போராட்டங்களை ஒடுக்கும் வகையில் இந்தத் தடையும் ஒன்றாக இருக்குமாம்.

தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூட்டம் ஒன்றில் பேசுகையில், திராவிட முன்னேற்றக் கழகம் தங்கள் போராட்டத்தின்போது உதவும் என்று கூறியதாகவும் அப்படி வெளிவந்தச் செய்தியை ஆதாரமாக வைத்தே இலங்கை சர்க்கார் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களை இலங்கைக்கே வரவொட்டாமல் தடுத்துவிட முடிவு செய்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

புத்தகங்களுக்கு விற்பனை வரி

புதுடில்லி, சூன் 4—

புத்தகங்களுக்குக்கூட விற்பனை விதிக்கப்பட்டு வாசகர்களிடம் வரியை வசூலித்து வருவது தெரிந்ததே.

இந்த வரியை ரத்து செய்து, விற்பனை விதிப்பில் புத்தகங்களுக்கு விலக்களிக்க வேண்டும் என்று தேசிய அபிவிருத்திக் குழு முடிவு செய்து மத்திய அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளது என்று தெரிய வருகிறது.

இந்தி மொழி சட்ட அகராதியாம்!

டில்லிப் பெரியவர்களின் வெறி கொண்ட நடவடிக்கைகள்

புதுடில்லி, சூன் 3—

சொல்வளமோ, இலக்கிய வளமோ, இலக்கண வரம்போ இல்லாவிட்டாலும்கூட, இந்தி மொழியை எல்லாமுடைய ஒரு மொழியாக ஆக்கிவிட டில்லிப் பெரியவர்கள், வெறிகொண்ட நிலையில் ஆவேசத்தோடு காரியங்களைச் செய்துவருகிறார்கள்.

இந்தி சட்ட அகராதி ஒன்று தயாரிக்கிறதாம் மத்திய சர்க்கார் சட்ட இலாகா.

இதன் நோக்கம் இப்போது, நீதிமன்றங்களில் நடைபெறும் வேலைகள் ஆங்கிலத்திலிருப்பதை படிப்படியாக இந்திக்கு மாற்றுவதாம்.

அதற்காக சட்ட சம்மந்தமான நுணுக்கச் சொற்களை இந்தியில் உருவாக்குகிறார்களாம்.

இதுவுமன்னியில் ஏற்கனவேயுள்ள பல மத்திய சட்டங்களை இப்போது இந்தியில் மொழி பெயர்த்து வருகிறார்களாம்.

ஒரு பக்கத்தில் ஆங்கிலத்திலும, எதிர்பக்கத்தில் இந்தியிலும் சட்டங்கள் அச்சடிக்கப் படுமாம்.

'நாட்டின் உணவு பொருள் நிலைமைப்பற்றி கவலைப்படுவதற்கு காரணம் இல்லை. நாட்டில் உணவு உற்பத்தி பெருகியுள்ளது. கோதுமை, அரிசி உள்பட வேண்டிய அளவு தானியங்கள் கையிருப்பில் உள்ளது" என்று மத்திய அமைச்சர் தாமஸ் கூறியுள்ளார்.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சன்னை 5—6—57 புதன்

மற்றுமோர் இரயில் விபத்து

பதினெட்டு பேர் பலியாயினர்! பம்பாய் நகரில்! மீண்டும் ஓர் இரயில் விபத்து, இந்த பலிக்குக் காரணம்.

இரண்டு மின்சார இரயில்கள் எதிரும் புதிருமாக ஓடிவந்து மோதிக்கொண்டிருக்கின்றன; பதினெட்டுப் பேர்களின் உயிரைக் குடிக்கவும், சுமார் 65-பேர்களுக்கு வேதனைகளைத் தரவுமாக.

விபத்துக்கள், வெகு சகஜமாகிவிட்ட சாதாரண சம்பவங்களாகி வருகின்றன, இந்திய இரயில்வேக்களைப் பொறுத்தவரையில். இயற்கையாக அந்த விபத்துக்கள், அதிகாரிகளுக்குத் தரவேண்டிய அதிர்ச்சியைத் தரத் தவறி வருகின்றன. காங்கிரஸ் சர்க்காருக்கு உடல் புல்லரிப்புஏற்படுவது குறைந்து வருகிறது நாளாக நாளாக.

இந்த விபத்துக்கள் என்ற அபாயங்கள் தவிர்க்கப்பட்ட ஒரு நிம்மதியான பிரயாணம் கிடைக்காமலேயே போய்விடுமோ என்ற அச்சம் மேலும் வளருகின்றது, மக்களிடை— அரியலூருக்குப் பிறகு மட்டுமல்ல, மெஹ்பூப்நகர் விபத்து பற்றிய நீதிமன்ற விசாரணை டில்லியால் ஒதுக்கிவைக்கப்பட்ட பிறகும்தான்.

'அதிகாரிகள் போதிய சிரத்தையுடனும்' பொறுப்புணர்ச்சியுடனும், அக்கறையுடனுமிருந்திருந்தால், விபத்தினைத் தவிர்த்திருக்க முடியும், என்பது மெஹ்பூப்நகர் இரயில் விபத்து குறித்து உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவரின் தீர்ப்பாகும்.

இந்தத் தீர்ப்பை ஏற்றுக்கொள்ள மறுத்து, விபத்துக்குக் காரணமாயிருந்து நூற்றுக்கணக்கான குற்றமறியா மக்களைக் கொன்று குவித்த அதிகாரிகளைக் காப்பாற்றுவதற்கு ஓடிவிட்டது டில்லி சர்க்கார்.

ஆளுகிற சர்க்காருக்கும் ஆளப்படுகிற மக்களுக்கும் நீதி கிடைக்கச் செய்வதற்குரிய ஒரே சாதனம் நீதி மன்றம் தான் இந்த நாட்டு ஆட்சி முறைப்படி. ஆனல் அந்த ஒரே வழியில் கிடைத்த நீதிக்குத் தலை வணங்க டில்லி சர்க்கார் மறுத்துவிட்டுள்ளனர். இது அவர்கள், ஒரு உயர்நீதி மன்ற நீதிபதிக்கு இழைக்கும் கொடிய அவமானம் மட்டுமல்ல, எதிர்கால விசாரணைதாரர்களுக்குத் தரும் எச்சரிக்கையுமாகும் என்பதால், இனி மக்கள் இது போன்ற விசாரணைகளில் நம்பிக்கை வைப்பது துர்லபந்தான்.

உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவர் தந்த தீர்ப்பினையே அலட்சியம் செய்துவிடத் துணிந்துவிட்ட டில்லிப் பெரியவர்களின் நெஞ்சத்தை என்னென்று அழைப்பது?

டில்லிப் பெரியவர்களின் அசம்பாவமான இந்த அலட்சியம், இரயில்வே அதிகாரிகளிடை பொறுப்புணர்ச்சியை அதிகரிக்கத் துணை புரிவதாக அமையவில்லை. மேலும் அவர்களைப் பொறுப்பற்றவர்களாக்கவே பயன்படுவதாக உள்ளது. இயற்கையாகவே மிகப் பெரிய அதிகாரிகளுக்கும், எல்லாத் துறைகளில் உள்ளவர்களுக்கும் பொறுப்புணர்வு இயற்கையாக ஏற்பட வேண்டும் அல்லது எந்த நிமிடத்திலும் நமது ஆடம்பர வாழ்க்கைக்கு இவர் தந்து கொண்டிருக்கும் இந்தப் பதவிக்கு ஆபத்து ஏற்படக்கூடும் என்ற அச்சம், அந்தப் பொறுப்புணர்வைத் தோற்றுவிக்க வேண்டும்; இரண்டும் இல்லாவிட்டால் வேறு வழியே இல்லை. இயற்கையாக பொறுப்புணர்ச்சி பெருத அலட்சிய புத்திபடைத்த உயர்தர அதிகாரிகளுக்கு, மெஹ்பூப்நகர் விபத்து விசாரணைக் குழுவின் தீர்ப்பு ஏற்கப்பட்டிருந்து, விபத்துக்குப் பொறுப்பான அதிகாரிகள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டிருந்தால், இதர இடங்களில் உள்ள அத்தகு அதிகாரிகள் பொறுப்புணர்ச்சி பெற வழி ஏற்பட்டிருக்கும். இதைச் செய்ய டில்லிப் பெரியவர்களுக்கு, மனம் இடம் தரவில்லை. நூற்றுக்கணக்கான குற்றமறியா மக்களின் உயிர்களைவிட ஒரு சில அதிகாரிகளின் பதவிகள் பெரிதாகப்பட்டன போலும் அவர்களுக்கு.

பெரியவர்களின் போக்கு இப்படி இருந்தால், பம்பாயில் ஏற்பட்டது போன்ற சிறிய விபத்துக்கள் மட்டுமல்ல மெஹ்பூப் நகர், அரியலூர் போன்ற விபத்துக்களும் பெருமளவில் ஏற்படத்தான் செய்யும் என எச்சரிக்க விரும்புகிறோம்.

பம்பாய் விபத்துக்கேனும்காரணமானவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்படுவார்களா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

18 பேர்களைக் கொன்ற பம்பாய் விபத்து

விசாரணை நடக்கிறதாம்!

பம்பாய், ஜூன் 4—

பம்பாயில் நேற்று நடைபெற்ற இரயில் விபத்திற்கான காரணங்களை அறிய விசாரணை ஒன்று துவங்கப்பட்டிருக்கிறதாம்.

நேற்று, விடலா மற்றும் செவ்வரி இரயில் நிலையங்களுக்கிடையில், இரண்டு மின்சார வண்டிகள் மோதிக்கொண்டதின் விளைவாக 18 பேர் உயிரிழந்ததும், சுமார் 65 பேர் காயமுற்றதும் தெரிந்ததே.

விசாரணை, இரயில்வே இன்ஸ்பெக்டரால் நடத்தப்படுகிறதாம்.

அதிசயம் - ஆனல் உண்மை!

பம்பாய், ஜூன் 3—

சாலையோரமாக கார் நிறுத்தப்பட்டிருந்ததாம். பக்கத்தில் தனித்து ஒருவருடன் பேசிக்கொண்டிருந்தவரைக் கண்டு சந்தேகித்தது, சப்-இன்ஸ்பெக்டர் பல கேள்விகளைக் கேட்டாராம்.

யார் நீங்கள்? எங்கிருந்து வந்தீர் என்று பல கேள்விகள் கேட்ட பின்னரே அந்த நபர் மாநிலத்தின் சிவில் அமைச்சர் காசி என்பது தெரிய வந்ததாம்.

இந்த சம்பவத்தை பற்றி அமைச்சரே நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

'அகில இந்தியாவை நினைவில் வையுங்கள்'

மாநில முதன் மந்திரிகளுக்கு பண்டிதர் உபதேசம்

மாநிலங்களுக்கு விரிவான சுதந்தரம் இருப்பதாக பச்சைப் பொய்யுரை

'அகில இந்தியா'வை நிலைநிறுத்திவிட வேண்டும் என்ற துடிப்பில், பண்டித நேரு சமயம் கிடைக்கும்போதெல்லாம் 'அகில இந்திய' முக்கியத்துவத்தை வலியுறுத்தத் தவறுவதில்லையல்லவா?

அந்த வேலையை எல்லா மாநில முதன்மந்திரிகள் முன்னிலையிலும் அவர் செய்திருக்கிறார் புதுடில்லியில்.

"முதன் மந்திரிகளே! ஏதாவது முக்கியமான விவகாரம் பற்றி நீங்கள் பரிசீலிக்கிறீர்களா? அப்படியானல் 'அகில இந்தியா' என்ற அம்சத்தை மனதில் வையுங்கள்" என்று உபதேசித்திருக்கிறார்.

பச்சைப்பொய்

'இந்தியா ஒரு பெரிய நாடு. நமக்கு ஒரு பெடரல் முறை சர்க்கார் இருக்கிறது. அதில் மாநிலங்களுக்கு ஏராளமான அளவு சுதந்தரம் அளிக்கப்பட்டிருக்கிறது' என்று ஒரு பெரும் பச்சைப் பொய்யையும் கூறி, இந்த 'மாநிலங்களுக்கிடையேயும் மத்திய சர்க்காருக்கிடையேயும் விரிவான ஒற்றுமையும் ஒத்துழைப்பும் இருக்கின்றன' என்றும் கூறினாராம்.

பிலாய் உருக்குத் தொழிற்சாலை

ரெய்ப்பூர், ஜூன் 3—

பிலாய் உருக்குத் தொழிற்சாலையின் வேலைகள் திட்டமிட்டபடி நடைபெற்றுவருகின்றனவாம். அடுத்த ஆண்டு இறுதியில் செயல்படத் துவங்குமாம்.

இதுவரை 12 கோடி ரூபாய் வரை செலவிட்டு சுமார் 20,000 டன் எடையுள்ள ரஷ்ய இயந்திரங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன என்றும் தெரியவருகிறது. மேலும் 15 கோடி ரூபாய் செலவில் மூன்று உலைகள் நிறுவப்படும் என்று தெரியவருகிறது. மற்றும் இரயில்பாதை, மின்சார விநியோகம், தண்ணீர் வசதி முதலியன ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளதாம்.

இந்த தகவல்கள் பிலாய் தொழிற்சாலையின் ஜெனரல் மானேஜர் எஸ். என். மேதா நிருபர்களிடம் அறிவித்துள்ளார்.

'பொருளாதார நெருக்கடி ஏற்படும்'

இந்தியாவின் தவறைச் சுட்டிக்காட்டித் திட்டத்தைக் குறைத்துக்கொள்ள அறிவுரை

லண்டன், ஜூன் 3—

இரண்டாவது 5 ஆண்டு திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதில் பண்டித நேரு காட்டிவரும் வேகம், இந்தியாவுக்கு பெரிய ஆபத்தையும், பொருளாதார நெருக்கடியையும், ஸ்டர்லிங் நிலுவையில் உள்ள தொகையை செலவிட வேண்டிய நிலையையும் உண்டாக்கும் என்று 'சண்டே எக்ஸ்பிரஸ்' என்ற ஏடு எடுத்துக் காட்டியுள்ளது.

தொழில் சம்பந்தமான யந்திரங்கள் முதலியன இறக்குமதி செய்வது சம்பந்தமாகவும், உணவுப் பொருள்கள் இறக்குமதி சம்பந்தமாகவும் இந்தியா பற்றாக்குறையை விரிவுபடுத்திக்கொண்டு வருகிறது. இறுதியாக, அமெரிக்காவுக்கும், உலக பாங்கிக்கும் தரவேண்டிய கடன் நீங்கலாக இந்தியாவின் வாணிப பற்றாக்குறையை சரிக்கட்ட பிரிட்டன் வசம் உள்ள 'ஸ்டர்லிங்' நிலுவை முழுவதும் தேவைப்படக்கூடும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

இத்திங்கள் இறுதியில் லண்டனில் நடைபெற இருக்கும் காமன்வெல்த் அமைச்சர்கள் மாநாட்டில் பண்டித நேருவுக்கு நிலைமையை எடுத்துரைத்து, திட்டத்தைக் குறைத்துக் கொள்ளவேண்டும் என்று அறிவுறுத்தப்படும் என்றும் தெரியவருகிறது.

செய்தி நிறுவனம்

கூட்டுறவு முறைக்கு மாற்று!

புதுடில்லி, ஜூன் 2—

"இந்துஸ்தான் சமாச்சார்" என்ற செய்தி நிறுவனம் ஒன்றை அதன் ஊழியர்கள் கூட்டுறவு முறையில் மாற்றி அமைத்துவிட்டனர் என்று தெரிகிறது.

இனி அந்த நிறுவனம், 'இந்துஸ்தான் சமாச்சார் கூட்டுறவு தொழிற் சங்கம் லிமிடெட்' என்ற பெயருடன் விளங்கும் என்று தெரிகிறது.

இதற்கான ஒப்பந்தம் ஒன்று பத்து ஆண்டுகளுக்கு முன் நிறுவனத்தைத் தோற்றுவித்து அதன் அதிபராயிருந்துவரும் எஸ். எஸ். ஆப்தே என்பாருக்கும், நிறுவனத் தொழிலாளருக்கும் இடையில் டாக்டர் பஞ்சாப் ராவ் தேஷ்முக் என்ற மத்திய கூட்டுறவு இலாகா மந்திரியின் முன்னிலையில் நடைபெற்றிருக்கிறது.

வரி விதிக்க வழி காட்டியவர் மகிழ்கிறார்

புதுடில்லி, ஜூன் 3—

மத்திய அரசாங்கத்தின் புதிய வரவு-செலவுத் திட்டத்தின் நகல் பேராசிரியர் நிகலஸ் காலடருக்கு அனுப்பப்பட்டுள்ளதாம்.

இந்தியாவில் மேலும் வரி விதிப்புகளுக்கான வழிகளை ஆராய்ந்து மத்திய அரசாங்கத்திற்கு தான் வகுத்துத் தந்த திட்டங்கள் வீண்போகாது, நடைமுறைக்கு கொண்டுவந்துள்ளதைக்கண்டு அவர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார் என்று தெரியவருகிறது.

இஸ்ரேல் மீது மீண்டும் தாக்குதலாம்

எகிப்து பற்றி அச்சம்

ஜெருசலம், ஜூன் 3—

இஸ்ரேலுக்கு எதிராக கொரில்லாச் சண்டையைப் படிப்படியாகத் துவங்க, நாசர் முடிவு செய்திருக்கிறார் என்பதில் சந்தேகமில்லை என்று இஸ்ரேல் வெளிவிவகார இலாகா அறிக்கை ஒன்று கூறுகிறது.

அண்மையில் காசா எல்லையில் நடைபெற்ற சிறு சம்பம் ஒன்று பற்றிக் கூறுகையில் மேலும் அந்த அறிக்கை, 'இவை எதிர்காலத்தில் திட்டமிடப்பட்டுள்ள மிகப் பெரிய தாக்குதல்களின் முன்னறிவிப்பு,' என்று கூறியிருக்கிறது.

பாக்தாத் இராணுவக் கூட்டு

அமெரிக்காவின் பங்கு விரிவாகிறது

பாக்தாத் இராணுவக் கூட்டுக்குள் அமெரிக்காவும் பிரவேசித்துவிட்டது.

இந்தக் கூட்டு ஒப்பந்தத்தின் இராணுவக் கமிட்டியில் உறுப்பினராகச் சேரச் சம்மதித்ததுடன் சேர்த்து, அமெரிக்கா, மூன்று கமிட்டிகளில் அங்கம் வகிக்கிறது.

என்றாலும் அது, பிரிட்டன், ஈராக், ஈரான், பாரசீகம், துருக்கி, பாகிஸ்தான் ஆகியவைபோல முழு உறுப்பினராகவில்லையாம்.

ஆகாயக் கோட்டை கட்டவேண்டாம்

இரண்டாவது 5 ஆண்டுத் திட்டத்தின் சில பகுதிகளை குறைக்க வேண்டும் என்றும், அல்லது திட்டத்தின் காலத்தை நீடிக்க வேண்டும் என்றும், பாரத மக்கள் சங்கம் நிர்வாக குழுவில் முடிவு செய்து அரசாங்கத்திற்கு எடுத்துரைத்துள்ளது.

ஐ. நா. வுக்கு மதிப்பு தர வேண்டும்

கராச்சி, ஜூன் 3—

ஐ. நா. பாதுகாப்பு சபையின் முடிவுப்படி நடந்துகொண்டு, இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே உள்ள காஷ்மீர் தகராறு தீர்க்கப்பட வேண்டும் என்று இராக் பிரதமர் பாக்தாத் அணி மகாநாட்டில் தெரிவித்துள்ளார்.

நகர சபையை திருத்த முயற்சி

சோஷியலிஸ்டுகள் கையாண்ட புதுமுறை

கல்கத்தா தெருக்களில் குப்பை கூளங்களை சரிவர அகற்ற நகரசபை முற்படவில்லை என்பதைக் கண்டு, சோஷியலிஸ்டுகள், ஒரு புதுமுறையைக் கையாண்டுள்ளனர்.

நகர சபையின் அலட்சிய போக்கு சுகாதாரக் குறைவுக்கு வழிகாட்டுவதாக உள்ளது.

சோஷியலிஸ்டுகள் கூட்டமாகச் சென்று மார்கெட்டுகளில் கிடந்த குப்பைக் கழிவுகளை கூடைகளில் வாரி எடுத்துக்கொண்டு ஊர்வலமாக நகரசபை சென்று அந்த குப்பை கூடைகளை நகர சபையின் வாயலில் வைத்து நகரசபையின் கடமையை வலியுறுத்தியுள்ளனர்.

எதிர்காலத்தில் நகர சபை திருந்தி கடமையைச் செய்ய முற்படாவிட்டால், வரிகொடா இயக்கம் நடத்த வேண்டிய அளவிற்கு சோஷியலிஸ்டுகள் முற்படக்கூடும் என்று தெரிய வருகிறது.

தமிழ் மகனின் அரிய சாதனை

153 மணி நேரம் சைகிள் சவாரி

பொதுச்செயலாளர் பாராட்டு

சென்னை, ஜூன் 4—

கடந்த 28-ந் தேதி சென்னை நகரசபையின் மேயர் சீனிவாசன் முன்னிலையில், தோழர் ஜோசப் தவுலத், தனது இடைவிடாது சைக்கிள் சவாரியை துவக்கினார். இடைவிடாது அவர் தொடர்ந்து 153½ மணி நேரம் சைக்கிள் சவாரி செய்து வெற்றிகரமாக இன்று முடித்துள்ளார்.

தவுலத் விடாமுயற்சியுடன், துணிவுடனும், மேற்கொண்ட முயற்சியை வெற்றிகரமாக முடித்துள்ளது பாராட்டத் தக்கது. குளித்தல், உடை மாற்றுதல், உணவு உட்கொள்ளுதல் முதலியன அவர் சைக்கிள் சவாரி செய்துகொண்டே முடித்துள்ளார்.

"அவரது உள்ளவலிவு போற்றத் தக்கது. அவர் நம்மவர் என்பதை நினைக்கும்போது நான் மகிழ்ச்சியடைகிறேன்."

என்று பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், தமிழ் மகனின் போற்றத்தக்க சாதனையை பாராட்டி, ரூ. 10 அன்பளிப்பாக அளித்துள்ளார்.

ஜோசப் தவுலத்தை பாராட்டி பேசிய பொதுச் செயலாளர் அவர்கள் மேலும்குறிப்பிடுகையில் அவரது உடல் வலிமையை காட்டிலும்உள்ளவலிவேமுக்யமானது; நம் நாட்டு வாலிபர்கள் இத்தகைய உள்ள வலிவும், துணிவும் பெறுவார்களானால் நாட்டுப் பணியாவும் நலமுற நடக்கும் என்று தெரிவித்துள்ளார்.

சென்னை-ஏழுகிணறு பகுதியில் புது வரிகளுக்குக் கண்டனக் கூட்டம்

காஞ்சி-கல்யாணசுந்தரம், மற்றும் பல தோழர்கள் பேச்சு

31—5—57 மாலை 6 மணிக்கு, புதுவரிகளைக் கண்டித்து, சென்னை - ஏழுகிணறு, 9-வது வட்டம் 'அண்ணா அறிவகம்' சார்பில், ஏழுகிணறு - குட்டி மேஸ்திரி தெருவில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர் பாண்டியன் முன்மொழிய, 9-வது வட்ட நகர மன்ற உறுப்பினர் தோழர் சி. முனுசாமி வழி மொழிய தோழர் ஏ. எஸ். வேணு அவர்கள் தலைமை வகித்தார்.

அவர் தனது தலைமையுரையில் புதிய வரிகளைக் கண்டித்தும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாட்டிற்கு இழைக்கப்பட்டிருக்கும் அநீதியை விளக்கி, இந்தத் திட்டம் நிறை தென்னாட்டின் வரிப் பணம்தான் பயன்படுகிறது என்பதை மக்களுக்கு உணர்த்தினர். மேலும் அவர் பேசுகையில், வரி கொடுக்க வழி கூறும் காங்கிரஸ்காரர்களின் முரண்பட்டயோசனைகளையும் சுட்டிக்காட்டினர். இறுதியில் வரிப் பிரச்சினையினாலேயே கவிழ்ந்த பிரெஞ்சு நாட்டின் மாலட் ஆட்சியை ஆட்சியாளருக்கு நினைவூட்டி, எச்சரிக்கை விடுத்தார்.

அடுத்துத் தோழர் வி. எஸ். கோவிந்தராசன் அவர்கள் பேசுகையில், அளவின்றி வரிபோடும் அரசு அது தன்னுடைய வீழ்ச்சியை நோக்கிச் செல்லுகிறதென்ற உண்மையை எடுத்துக்காட்டி, அரசாங்க ஊழல்கள்- பண விரயம் முதலியவற்றை பொதுச்செயலாளர் எடுத்துக் காட்டியிருப்பதை சுட்டிக் காட்டி, தி. மு. கழகம் புதுவரிகளை எதிர்ப்பதன் நோக்கத்தை - காரணத்தை விளக்கி, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை தள்ளிப் போட்டால் குடிமுழுகிப் போய் விடாது என்று ஆட்சியாளருக்கு அறிவுரை பகன்றார்.

பின்னர் தோழர் வே. திரு. அரசு அவர்கள், இந்தத் திட்டத்தில் தென்னகத்திற்குப் பலன் ஒன்றுமில்லை என்பதை தெளிவாக்கி சிறிதுநேரம் பேசினார்.

இறுதியாகப் பேசிய, தோழர் காஞ்சி - கல்யாணசுந்தரம் அவர்கள் நாம் வரிகளை கண்டிக்கும் நேரத்தில், நல்ல காங்கிரஸ்காரர்கள் பலரும் பார்லிமெண்டில் கண்டிக்கிறார்கள் என்றும், ஏழைகளுக்கு மட்டும் வரி போடும் சர்க்கார் தோட்ட முதலாளிகளுக்கு வரி போடாததன் காரணம்தான் என்ன? என்ற வினா எழுப்பியும், முதல் திட்டம் வெற்றியென்கிறார்கள். ஆனால் விலைவாசிகள் - வாழ்க்கைத்தரம் முதலியவை கொஞ்சமும் கூடவில்லையென்பதை தெளிவாக்கி,மக்கள் வாழ்வதற்கு என்று சொல்லிக்கொண்டு, மக்கள் வாழ்வை ஒழித்துக் கட்டத்தான் இவர்களின் முயற்சியமையும் என்ற உண்மையை தெளிவாக்கி, அன்றாடம் கூடும் பங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளை யெல்லாம் உவமையாகக் காட்டி, நகைச்சுவை ததும்ப உரை நிகழ்த்தினர்.

முடிவில், தலைவர் தீர்மானங்களை மக்களிடம் மொழிய, மக்கள் தங்கள் ஆரவாரப் பேரொலி மூலம் தங்கள் ஆதரவை தெரிவித்தார்கள். தோழர் இலக்குமிபதி நன்றிகூற கூட்டம் முடிவுற்றது. (ந. - நி.)

தலைமை நிலையச் செய்தி:

கோவைமாவட்டதி.மு. கழக செயலாளர் விலகல்

கோவை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், தாம் பாராளுமன்ற உறுப்பினர் பொறுப்பை ஏற்றிருப்பதாலும், அடிக்கடி டில்லி சென்று நீண்ட நாட்கள் தங்கியிருக்கும்படி ஏற்பட்டுவிடுவதாலும், இந்த சூழ்நிலையில் மாவட்டச் செயலாளர் பொறுப்பைச் சரிவர நிறைவேற்றிவைக்க இயலாது என்று கருதுவதாலும் மாவட்டச் செயலாளர் பொறுப்பிலிருந்து விலகிக்கொள்வதாகத் தெரிவித்துள்ளார்கள். கோவை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக அலுவல்களை, புதிய மாவட்டச் செயலாளர் தேர்ந்தெடுக்கப்படும் வரை, கோவை மாவட்ட தி. மு. கழக துணைச் செயலாளர், தோழர் வி. சண்முகநாதன் அவர்கள் கவனித்து வருவார்கள். கோவை மாவட்டக் கழக சம்பந்தமாக தொடர்புகொள்பவர்கள்

துணைச்செயலாளர்
(தோழர் வி. சண்முகநாதன்,
11/205 எல். எஸ். புரம்,
மேட்டுப்பாளையம்)

அவர்களோடு தொடர்புகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

அறிவகம்'
சென்னை
1-6-57
தலைமைக் கழகம்,
(தி. மு. க.)

கூட்டுறவு சாகுபடி முறை வேண்டும்

சீனு சென்று திரும்பியவர் கருத்து

புதுடில்லி, ஜூன் 2—

இந்தியாவில் கூட்டுறவு சாகுபடி முறை அவசியம் என்று சீனு சென்று திரும்பியுள்ள பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

சென்ற ஆண்டு ஆர். கே. படீல் தலைமையில் இந்த பிரதிநிதிகள் சீனு சென்றனர்.

அபிவிருத்தி முறைகளை புகுத்தியும், சாகுபடியை தீவிரப்படுத்தியும், வேலை வாய்ப்புகளை அதிகரிக்கவும் இந்தியாவில் கூட்டுறவு முறையில் சாகுபடி செய்ய வேண்டும் என்று அவர்கள் திட்டக் குழுவிடம் தந்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

ஆரம்பத்தில் 10,000 கூட்டுறவு சங்கங்களை துவக்கி அதன் பின்னர் நாடு முழுவதும் விரிவுபடுத்தலாம் என்றும் ஆலோசனைக் கூறியுள்ளனர்.

சீனுவில் பெருவெள்ளம்

நிவாரண வேலைகளில் 10,000 துருப்புகள்

ஹாங்காங், ஜூன் 3—

தென்சீனுவில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தைத் தடுக்கும் வேலைகளில் 10,000 துருப்புகளும், இலட்சக்கணக்கான குடியானவர்களும் ஈடுபட்டு வருகின்றனராம். இந்தப் பணியில் 10-க்கு மேற்பட்ட சீன அதிகாரிகள் உயிரிழந்துள்ளனர் என்று தெரியவருகிறது. ஹூகோ தீபகற்பத்திலிருந்து பார்மோஸாவுக்கு எதிரில் உள்ள பூகின் கடற்கரைப் பகுதிவரை ஒரே வெள்ளக் காடாக உள்ளதாம்.

திபெத்நாட்டில் மதுவிலக்கு

சீன அதிகாரிகள் உத்தரவு

காட்மாண்டு, ஜூன் 4—

சீன அதிகாரிகள் திபெத் நாட்டில், மதுவிலக்குத் திட்டத்தை அமுல் செய்திருக்கிறார்களாம்.

இது லாஷாவிலிருந்து 'காமனர்' என்ற ஆங்கில இதழ் தரும் செய்தி.

எல்லா சாராயக் கடைகளும் மூடப்பட வேண்டுமென உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறதாம்.

இத்துடன், மதுவிலக்குச் கொள்கைக்கு ஆதரவு திட்டுவதற்காக, 'குடி எதிர்ப்பு' இயக்கம் ஒன்றையும் அதிகாரிகள் துவக்கியுள்ளனராம்.

அன்பளிப்புகள்

கிரப்பாளையம் தோழர் கலியபெருமாள்—தோழியர் பார்வதி வாழ்க்கை ஒப்பந்த விழா நடைபெற்றதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

தேவபாண்டலம் தி. மு. கழகச் செயலாளர் தோழர் கே. தனக்கோட்டி 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தந்தார்.

* * *

சேலம் - மின்னும் பள்ளியில் நடைபெற்ற கழகப் பொதுக்கூட்டத்தில், ஒரு பெண் மகவுக்கு 'வெற்றிச் செல்வி'யென பெயரிடப்பட்டதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு அன்பளிப்பாகத் தரப்பட்ட ரூ. 1-ம் தோழர் எம். பி. சுப்பிரமணியம் எம். எல். ஏ., அவர்கள் மூலம் வரப்பெற்றோம்.

* * *

24-5-57ல் பட்டுக்கோட்டை தோழர் சு. துரைராசு - அறந்தாங்கி தோழியர் அ. செனார்த்தனம் வாழ்க்கை ஒப்பந்த விழா நடைபெற்றது; இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

உத்திரமேரூர் தோழர் கே. முத்து அவர்களது துணைவியார் தோழியர் அலமேலு அவர்கள் ஓர் ஆண் மகவுக்குத் தாயானார்கள்; இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

சேலம் - பெரமனூர் தோழர் பெ. லெ. பரசுராமன் அவர்கள் 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தந்தார்.

* * *

5—5—57ல், சென்னை 12வது வட்ட தி. மு. கழகத் தோழர் ஏ. என்றி—தோழியர் சரோசா வாழ்க்கை ஒப்பந்த விழா தோழர் என். சிவரத்தினம் தலைமையில் நடைபெற்றது; தோழர்கள் காஞ்சி கல்யாணசுந்தரம், காஞ்சி மணிமொழியார், தமிழழகன், என். இராமதாஸ், ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

பம்பாய்மத்திய இரயில்வேதொழிலாளத் தோழர் ஜி. பி. வேலு அவர்கள் 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகக் கொடுத்தார்.

அன்பளிப்புகள் அனைத்தும் வரப்பெற்றோம். மகிழ்ச்சி-நன்றி!
—பொறுப்பாளர்.

ரூ. 120 இலட்சம் செலவில் சுகாதார வசதிகள்

கடலூர், ஜூன் 4—

தென் ஆற்காடு, தஞ்சை, திருச்சி, இராமநாதபுரம், நெல்லை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 5 இலட்சம் மக்கள் பயன்பெறும் சுகாதாரத் திட்டம் இரண்டாவது 5 ஆண்டு திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்திற்கு மொத்தம் ரூ. 120 இலட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

காலராவை அறவே ஒழித்துக் கட்ட இந்த திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாம்.

காவிரி, வைகை, தாமிரபரணி ஆகிய நதிகளின் கரையோர பகுதிகளில் காலரா ஏற்படுவதாக கண்டுபிடித்துள்ளனர்.

சுகாதார வசதிக் குறைவும், குடிதண்ணீருக்கு இந்த நதிகளை நம்பி இருக்க வேண்டிய நிலை இருப்பதே காலராவுக்கு காரணம் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. காலராவுக்குப் பிறப்பிடமென கருதப்படும் 378 கிராமங்களில் முதல் இந்த திட்டம் அமுல் செய்யப்படுகிறது.

இந்தத் திட்டத்தின்கீழ் எல்லா வீடுகளிலும் கக்கூசுகள் கட்டித் தரப்படுமாம். குடிநீர் வசதிக்காக 'கைப் பம்பு'களுடன் கூடிய ஆழமான கிணறுகள் வெட்டித் தரப்படுமாம்.

பெங்களூர் தொலைபேசி தொழிற்சாலை

புதுடில்லி, ஜூன் 3—

பெங்களூரில் உள்ள தொலைபேசி தொழிற்சாலை தனது உற்பத்தித் திட்டத்தை உயர்த்த முடிவு செய்துள்ளதாம்.

இரண்டாவது திட்ட காலத்தில் 65,000 தொலைபேசி கருவிகளும், 45,000 எக்ஸ்சேஞ்சு லைன்களும் உற்பத்தி செய்வது என்று முடிவு செய்யப்பட்டுள்ளதாம்.

1956 மார்ச் 31 முடிய ஓராண்டில் இந்த கம்பெனிக்கு மொத்தம் ரூபாய் 25,99,570 லாபம் கிடைத்துள்ளதாம்!

கல்வித்துறையிலும் வேற்றுமை

தென் ஆப்பிரிக்காவில் அநீதி

ஜோகன்ஸ்பர்க், ஜூன் 3—

தென் ஆப்பிரிக்க பல்கலைக் கழகப் படிப்பில் வெள்ளையரான மாணவருக்கும், இதர மாணவர்களுக்கும் வேற்றுமை காட்டும் சட்டத்தை தென் ஆப்பிரிக்க அரசாங்கம் கொண்டுவர முனைந்துள்ளது.

இந்த இன ஒதுக்கல் சட்டத்தை எதிர்த்து போராட்டம் நடத்த பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த 12,000 மாணவர்களின் சார்பில் 30 பிரதிநிதிகள் கூடி நிலைமையை ஆராய்ந்துள்ளனர் என்று தெரியவருகிறது.

கேப்டவுனில் பெரிய கண்டனக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறதாம்.

ஒரிசா மாநில வரவு செலவுத் திட்டம்

ரூபாய் 3 கோடிக்கு மேல் துண்டு

பற்றுக்குறையை டெல்லிதான் சரிக்கட்டித்தர வேண்டுமென்கிறார்

புவனேசுவரம், ஜூன் 3—

ஒரிசா மாநில சட்டசபை இன்று, முதன் மந்திரியும் நிதி மந்திரியுமான டாக்டர் அரிகிருஷ்ண மெஹதாப் தாக்கல் செய்த வரவு-செலவுத் திட்டம் 3 கோடியே 17 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாய் பற்றுக்குறையுடையது என்று தெரிகிறது.

57—58-ம் ஆண்டில் ரெவினியூ கணக்கில் உத்தேச வருமானம் ரூ. 21,89,48,000 என்றும் உத்தேச செலவு ரூ, 25,07,03,000 என்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது.

புதிய திட்டங்களுக்காக ரெவினியூ கணக்கிலும் முதலீட்டுக் கணக்கிலுமாகச் சேர்த்து ரூ. 19,41,54,000 செலவிட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

திட்டத்தைத் தாக்கல் செய்து பேசிய முதன்மந்திரி இந்த திருப்தியற்ற நிலையில் ஐந்தாண்டுத் திட்ட இனங்களுக்குச் செலவிட, இந்த மாநிலத்திலேயே நிதி திரட்டிக்கொள்ளும் வழி எதுமே இருக்கவில்லை என்றும், ஒரிசாவின் பின்தங்கிய நிலையைக் கணக்கில்கொண்டு, நிதிக் கமிஷன் ஒரிசாவுக்கு தீர்ப்பு வழங்க வேண்டும் என்றும், ஒரிசாவிற்கு அதிகமான மானிய உதவி தருமாறு, மத்திய சர்க்காருக்கு நிதி கமிஷன் சிபாரிசு செய்ய வேண்டும் என்றும் கூறியிருக்கிறார்.

டில்லி சர்க்கார் நிதிக் கமிஷனின் சிபாரிசின் பேரில், ஒரிசா மாநிலத்திற்கு உதவினாலன்றி, பற்றுக்குறையை வேறு வழிகளால் சரிக்கட்டுவது இயலாது போய்விடும் என்றும் மெஹதாப் கூறியதாகத் தெரிகிறது.

அரிசிக்குப்பதில் கோதுமை!

டெல்லியின் யோசனைக்கு கேரள முதல்வர் எதிர்ப்பு

இரண்டாம் திட்டத்தில் இடம் பெருத திட்டம் ஒன்றுக்கு அனுமதி கோருகிருர்

புதுடில்லி, ஜூன் 4—

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படாத திட்டம் ஒன்றிற்கு உடனடியாக அனுமதி வேண்டுமென கேரள முதன்மந்திரி நம்பூதிரிபாட் தேசிய அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்தில் வற்புறுத்தியிருக்கிருர்.

கேரளத்தின் உணவுப் பிரச்சினையைச் சமாளிப்பதற்கு, தலைச்சேரியில் இரண்டாவது பாராபோல் திட்டத்திற்கு டில்லி சர்க்கார் உடனடியாக அனுமதி வழங்க வேண்டும்.

இந்தத்திட்டம்மைசூர்-குடகு-சென்னை-க்கு மின்சாரமும், கேரளத்தில் மலபார் மாவட்டத்திற்கு தண்ணீர் வசதியும் தரும்

மத்திய சர்க்காரிடமிருந்து இந்த விசேஷ உதவியை கேரளம் கோருவதற்கு, மத்திய சர்க்காருக்குப் பலன் தரும் பலரோக்கப் பயிர்களை கேரளம் பயிரிட்டு வருகிறது என்ற வகையில் உரிமையுடைய தாகும் என்றும் அவர் கூறியிருக்கிருர்.

கோதுமை வேண்டோம்

டில்லி தந்த ஒரு யோசனையை கேரள முதல்வர் அந்தக் கூட்டத்தில் நிராகரித்திருக்கிருர்.

மத்திய சர்க்கார் கூறுகிற யோசனைப்படி கேரள மக்கள் அரிசிக்கு பதிலாக கோதுமை சாப்பிட முடியாது என்றும் நம்பூதிரிபாட் தெரிவித்திருக்கிருர்.

'ஆந்திர அரிசிதான் எங்களுக்கு வேண்டும் ஆனல் அது கிடைக்காத பட்சத்தில் பர்மா அரிசி வேண்டும்' என்றும் கூறியிருக்கிருர்.

மீனவர்களுக்கு வசதிகள்

சென்னை, ஜூன் 4—

மீனவர்கள் தங்கள் வலைகளையும், மற்ற மீன் பிடிக்கும் கருவிகளையும் வைத்துக்கொள்ள கடலோரமாக மொத்தம் 75 கிடங்கு அறைகள் கட்டுவதற்கு சென்னை அரசாங்கம் செலவை அனுமதித்துள்ளது.

ஒவ்வொன்றும் 25 கிடங்குகளாக 3 தொகுதிகளாக கட்டப்படுமாம்.

ஒரு தொகுதி திருவல்லிக்கேணி திடலிலும், மற்ற இரண்டும் அயோத்திக்குப்பத்திலும் கட்டப்படுமாம்.

இவை மீனவர்களுக்கு வாடகையின்றி இலவசமாக விடப்படுமாம்.

அறிவிப்பு

''காரைக்காலைச் சேர்ந்த நிரவியில் தி. மு. கழகம் இருக்க, 'அறிஞர் அண்ணு மன்றம்' என்ற ஒரு அமைப்பை சிலர் ஏற்படுத்திக்கொண்டு கழகக் கொடியையும் பயன்படுத்திக் கழகத்தின் பெயரால் பொதுமக்களிடம் நிதி திரட்டி வருவதாயும் தெரிகிறது. தி. மு. கழகத்திற்கும் மேற்படி பெயருள்ள மன்றத்திற்கும் எந்த விதத் தொடர்பும் இல்லை'' என்று நிரவி தி. மு. கழகச் செயலாளர் வி. சின்னப்பா அறிவிக்கிருர்.

அண்ணு படிப்பக பொது உறுப்பினர் கூட்டம்

5—6—57 இரவு 9 மணிக்கு சென்னை—வண்ணை அண்ணு படிப்பகம் பொது உறுப்பினர்கள் கூட்டம், (எண் 84, சோலையப்பன் தெரு) படிப்பக பணிமனையில் நடைபெறும்.

திருமணங்கள்

7-6-57 நண்பகல் 1 மணிக்கு, மதுரை - சுடுதண்ணீர் வாய்க்கால் ரோடு, மீனுட்சித் தோப்பு-எண். 27 இல்லத்தில், தோழர் துரைபாண்டியன் — தோழியர் தேனம்மாள் வாழ்க்கை ஒப்பந்த விழா, பேராசிரியர் க. அன்பழகன் எம். எல். ஏ., அவர்கள் தலைமையில் நடைபெறும்.

* * *

7—6—57 காலை 8½ மணிக்கு, கரூர் தோழர் இரா. வீரமலை — தோழியர் ரெ. ராஜாம்மாள் வாழ்க்கை ஒப்பந்த விழா தோழர் எம். குழந்தைவேல் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் பலர் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

7-6-57 காலை 8-30 மணிக்கு, தர்மபுரி 'டவுன் எக்ஸ்டென்ஷன்' தோழர் டி. வி. கோபால்-தோழியர் ஜீவாம்பாள் வாழ்க்கை ஒப்பந்த விழா தோழர் பி. பொன்னுசாமி தலைமையில் நடைபெறும்; தோழர்கள் பலர் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

7-6-57 காலை 7-30 மணிக்கு, தோழர் முத்து — தோழியர் சரோஜா வாழ்க்கை ஒப்பந்த விழா, ஆத்தூர் - நத்தர் சாயபு ஏரிகோடித்தோட்டத்தில், தோழர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் பலர் வாழ்த்துரை வழங்குவர்,"

இரண்டாவது திட்ட 1957-58 முதலீடு ரூ. 965 கோடி

மாநிலங்களின் பங்கு ரூ. 435 கோடி

புதுடில்லி, ஜூன் 4—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக 1957—58-ம் ஆண்டு மதிப்பிடப்பட்டுள்ள செலவு தொகை ரூ. 965.5 கோடியாகும்.

இதில் மத்திய அரசாங்கத்தின் முதலீடு தொகை ரூ. 530·9 கோடியாகும். மாநிலங்களின் முதலீடு தொகையின் மதிப்பு ரூ. 434·6 கோடி என்று திட்டக் குழு தெரிவித்துள்ளது.

மத்திய முதலீடு

மத்திய அரசாங்கம் 1957—58 திட்ட செலவிற்காக, இரயில்வே வருமானத்திலிருந்து ரூ. 149 கோடி கடனுகவும், சிறு சேமிப்பு மூலம் ரூ. 123 கோடியும், பிராவிடண்ட் நிதியிலிருந்து ரூ. 79 கோடியும், வெளி உதவி மூலம் ரூ. 143 கோடியும், 238 கோடி ரூபாய் மாநிலங்களுக்கு முதலீடாகவும் தர திட்டக்குழு யோசனைக் கூறியுள்ளது. இத்தனைக்கும் பிறகுகூட இந்த ஆண்டு ரூ. 37 கோடி துண்டுவிழுகிறது என்று தெரியவருகிறது.

மாநிலங்களின் முதலீடு

1957—58-ம் ஆண்டு திட்டத்திற்கான முதலீடு ரூ. 434·6 கோடி; மாநிலங்களின் வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் ரூ. 147 கோடியும், மத்திய உதவித் தொகையாக ரூ. 287 கோடியும் முதலீடு செய்யுமாம். துண்டுவிழும் தொகை ரூ. 7 முதல் 10 கோடி வரை இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

கழகக் கூட்டம்

★

திட்டச்சேரி:

பந்தாட்ட திடலில்

7—6—57 மாலை 6 மணிக்கு

தி. மு. கழகத் துவக்க விழா

பேசுபவர்:

சத்தியவாணிமுத்து எம்.எல்.ஏ.

உள்நாட்டு ஆறுகள் இணைப்பு

படகுகள் போக்குவரவு பெருகத் திட்டம்

பூனு, ஜூன் 4—

உள்நாட்டு போக்குவரத்து வசதிகளை அதிகரிக்க இந்திய அரசாங்கம், தக்க யோசனை கூற ஒரு குழு ஏற்படுத்தியிருந்தது தெரிந்ததே.

அந்தக் குழு நாட்டின் பல்வேறு நதிகளின் நிலையைக் கண்டறிந்து, தக்க ஆராய்ச்சிக்குப் பிறகு ஒரு திட்டத்தை தயாரித்து மத்திய அரசாங்கத்திற்கு கொடுத்துள்ளதாம்.

கிழக்கிலிருந்து மேற்கேயும், வடக்கிலிருந்து தெற்கேயும் நாடு முழுவதிலும் உள்ள நதிகளை ஒன்றுடன் ஒன்று இணைத்து போக்குவரத்து வசதியை அதிகரிக்க இந்தத் திட்டம் வழிகாட்டியுள்ளதாம்.

இந்த திட்டத்தின்படி நாட்டில் உள்ள கால்வாய்கள், நீர்த்தேக்கங்கள் மூலம் நதிகள் இணைக்கப்படும்.

இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் நாட்டின் ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலைக்கு சிறு கப்பல்களும், படகுகளும் போய்வருவதற்கு ஏற்றதாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது இந்தத் திட்டத்திற்கான ஆரம்ப வேலைகளே நடைபெற்றுள்ளது என்று உள்நாட்டு நீர் நிலைப் போக்குவரவு குழுத் தலைவர் கோக்லே நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

மாநில திட்டங்களும் முக்கியமே!

திட்டங்களுக்கு பலம் தேடுகிருர் நிதிஅமைச்சர்

புதுடில்லி, ஜூன் 4—

"திட்டத்தை நிறைவேற்றப் போவதாக மக்களுக்கு உறுதி கூறிவிட்டோம். இனிகுறைக்கவும் முடியாது, தாமதப்படுத்தவும் முடியாது. மத்திய அரசாங்கத்தின் திட்டங்களைப் போலவே மாநில அரசாங்கத்தின் திட்டங்களும் முக்கியமானவை. ரெவின்யூ பட்ஜெட்டை சரிகட்ட வேண்டிய பொறுப்பு மாநில அரசாங்கத்திற்கு உண்டு. மக்கள் நலனுக்காக வரி விதிக்கவும் மாநில அரசாங்கத்திற்கு உரிமை உண்டு."

என்று, அமைச்சர் சுப்பிரமணியம் தேசிய அபிவிருத்தி குழுவில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் பேசுகையில் மத்திய திட்டங்கள் மாநில திட்டங்கள் என்று வேற்றுமை காட்டப்படுவதை பற்றி முறையிட்டுள்ளார். மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கமும் இணைந்து எல்லா திட்டங்களையும் நிறைவேற்ற பாடுபடவேண்டும் என்று கேட்டுக்கொண்டு பேச்சை முடித்துள்ளார்.

தாளமுத்து கொலை எதிரொலி

மேலும் இருவர் கைது

தூத்துக்குடி, ஜூன் 4—

தூத்துக்குடி தி. மு. க. வீரர் தாளமுத்து படுகொலை சம்பந்தமாக தெற்கு வட்டார போலீஸ் அதிகாரி எர்னெஸ்ட், ருத்ரபாண்டி என்ற ஒருவரையும் மற்றொருவரையும், கைது செய்திருக்கின்றுர் என்று தெரிகிறது.

மற்றும் ரத்தினம் கொலை சம்பந்தமாகவும், மூவர் கைது செயயப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

அணு ஆயுத சோதனைகளை நிறுத்த!

ஒப்பந்தம் செய்துகொள்ள தயார் ரஷ்யாவின் அறிவிப்பு

மாஸ்கோ, ஜூன் 4—

அணு மற்றும் நீர்வாயுக் குண்டுகளை வெடித்து நடத்தும் சோதனைகளை உடனடியாக நிறுத்துவதற்கு தாங்கள் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளத் தயாராக இருப்பதாக ரஷ்யா இன்று லண்டனிடல் நடைபெறும் ஆயுதப் பரிகரணப் பேச்சுக்களின்போது தெரிவித்திருக்கிறது.

ஐ. நா. ஆயுதக் குறைப்பு துணைக் குழுக் கூட்டத்தில் பேசும்போது ரஷ்யப் பிரதிநிதியான ஜோரின் இதர அணு ஆயுத நாடுகள் சம்மதித்தால், தாங்கள் அப்படி ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளத் தயாராக இருப்பதாக அறிவித்ததுடன், உலகில் இன்று பாதிக்குமேலான மக்கள் இந்தச் சோதனைகளை வெறுக்கிருர்கள் என்பதையும் கூறினர்.

பதனி இறக்க அனுமதி

கோவை, ஜூன் 4—

கோவை மாவட்டத்தைச் சேர்ந்த தாராபுரம் தாலுக்காவில் கருப்பட்டி உற்பத்தி செய்யும் தொழிலாளருக்கு பனைமரத்தில் மட்டும் பதனி இறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாம். தாராபுரம் தாலுகாவில் 52 கூட்டுறவு சங்கங்களுக்கும் தென்னை மரத்தில் பதனி இறக்க அனுமதி வழங்க வேண்டும் என்று அமைச்சர் பக்தவத்சலத்தை கேட்டுள்ளனர். அந்த வேண்டுகோள் நிச்சயம் கவனிக்கப்படும் என்று அமைச்சர் உறுதியளித்துள்ளாராம். ஆனல் அந்த அனுமதியை யாரும் தவருக பயன்படுத்தக் கூடாதுஎன்று எச்சரித்துள்ளாராம்.

புதிய மாளிகைகள் எழுப்ப தடை!

சிக்கனச் செலவு பற்றி டெல்லியின் ஞானேதயம்

புதுடில்லி, ஜூன் 4—

டி. டி. கிருஷ்ணமாச்சாரியின் பேரில் நிதி இலாகா எல்லா மந்திரிசபை அலுவலகங்களுக்கும் அனுப்பியுள்ள சற்றறிக்கை ஒன்றில், புதிதாக கட்டிடங்கள் ஏதும் எழுப்பக் கூடாது எனவும், ஏற்கெனவே கட்ட திட்டமிட்டிருந்த கட்டிடங்கள்கூட எழுப்பப்படக் கூடாது எனவும் கூறியிருப்பதாகத் தெரிகிறது.

இதற்குக் காரணம் இரும்பு சிமெண்ட் மற்றும் சில பொருள்கள் விநியோக நிலை, மந்தமாக இருப்பதாயும இவை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செயயப்படுமானல்; அன்னியச் செலாவணி கரையும் எனவும், இப்போதைய நிலையில் அப்படிக்கரைப்பது நலமல்ல வென்றும நிதிமந்திரி கருதுகிருராம்.

தி. மு. கழகத்......

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இலங்கை சர்க்கார், சிங்கள இனமொழி வெறிகொண்டு, இலங்கையில் சிங்களம் மட்டுமே ஆட்சிமொழி என்ற சட்டத்தை நிறைவேற்றியதை எதிர்த்து இலங்கைத் தமிழர் கொதித்தெழுந்திருப்பதையும் அவர்கள் தமிழரசுக்கட்சியின் தலைமையில் திரண்டு, இலங்கையில் தமிழ் பகுதிகளுக்கு சர்வ சுதந்திரமும் அளிக்கும் ஒரு பெடரல் ஆட்சி முறைக்காக ஆகஸ்டு திங்களில் ஒரு பெரும் போராட்டம் நடத்த முடிவெடுத்து அதற்கு ஆயத்தமாகி வருவதும் தெரிந்ததே!

சத்தியவாணிமுத்து எம். எல். ஏ.

நிகழ்ச்சிகள்

ஜூன் 6: நாகூர்
7: திட்டச்சேரி
8: திருவண்ணுமலை
9: காலை—வேலூர் (திருமணம்)
மாலை—கருகம்பத்தூர் (ஊராட்சி மன்ற வரவேற்பு)
இரவு-பொதுக்கூட்டம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

சிறப்புக்கூட்டம்

★

9-6-'57 ஞாயிறு காலை 9 மணி: சென்னை, கோகலே மண்டபத்தில்

தலைவர்: க. அறிவழகன், எம்.ஏ.,

சொற்பொழிவாளர்கள்:

கண்ணதாசன்: (உலகம் இவ்வளவுதான்!)

கி. மனேகரன், M.A.: (அபாய அறிவிப்பு)

டி. கே. சீனிவாசன்: (தத்துவ வரலாறு)

நன்கொடை: ரூ. 1; அணு 8

—சிந்தனையாளர் கழகம், சென்னை-1

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அருணு அச்சகத்தில் அச்சிடப்பெற்று, 24, சூரியநாராயண செட்டி தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.